# தகவல் பாலம்

## தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

## OUR LADY OF GOOD HEALTH PARISH

Volume 1, Issue 10 December 2019


### *PASTORAL STAFF:*

**Fr. Charles W. Collins**
*Pastor*

Maureen Rajadurai
*Parish Secretary*

### *MASS SCHEDULE:*

| | |
|---|---|
| **Sunday:** | **12:30 pm & 4:30 pm** |
| **Tuesday & Wednesday:** | **7:30 pm** |
| **First Friday:** | **7:30 pm** |

### *OFFICE HOURS:*

| | |
|---|---|
| **Monday:** | **Closed** |
| **Tuesday - Friday:** | **9:00 am – 6:00 pm** |
| **Saturday:** | **9:00 am – 3:00 pm** |
| **Sunday:** | **11:00 am – 4:00 pm; 5:30 pm – 7:00 pm** |


### *OUR LADY OF GOOD HEALTH PARISH*

**131 Birchmount Road,**
**Scarborough, ON M1N 3J7**
***(Birchmount & Danforth Ave.)***

| | |
|---|---|
| **Phone:** | **416-264-OLGH (6544)** |
| **Fax:** | **416-264-6545** |
| **Email:** | **office@olghtamilparish.com** |
| **Website:** | **www.olghtamilparish.com** |


### கிறிஸ்து பிறப்புப் பெருவிழாத் திருப்பலிகள்

ஸ்காபரோ - மரியாவின் மாசற்ற இருதய ஆலயம்

**DEC 24** — **CHRISTMAS EVE**
செவ்வாய்க்கிழமை 24, இரவு 7:00, இரவு 11:45

**DEC 25** — **CHRISTMAS DAY**
புதன்கிழமை 25, மதியம் 12:30

நோர்த் ஜோர்க் - தூய பிலிப் நேரியார் ஆலயம்

**DEC 24** — **CHRISTMAS EVE**
செவ்வாய்க்கிழமை 24, இரவு 7:00

### புதுவருடப் பெருவிழாத் திருப்பலிகள்

ஸ்காபரோ - மரியாவின் மாசற்ற இருதய ஆலயம்

**DEC 31** — **NEW YEAR`S EVE**
செவ்வாய்க்கிழமை 31, இரவு 7:00 மணிக்கும் இரவு 11:30 மணிக்கு நற்கருணை வழிபாடும் ஆசீர்வாதமும் தொடர்ந்து திருப்பலியும்

**JAN 01** — **NEW YEAR`S DAY**
புதன்கிழமை 01, 2020, மதியம் 12:30

நோர்த் ஜோர்க் - தூய பிலிப் நேரியார் ஆலயம்

**DEC 31** — **NEW YEAR`S EVE**
செவ்வாய்க்கிழமை 31, இரவு 9:00

### மார்கழி மாத விசேட திருப்பலிகள்

**DEC 26** — வியாழக்கிழமை 26, மதியம் 1:30 - 2004 ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வருடாந்த திருப்பலி

**DEC 28** — சனிக்கிழமை 28, மதியம் 12:30 – மாசில்லா குழந்தைகள் திருவிழாத் திருப்பலி

**DEC 29** — ஞாயிற்றுக்கிழமை 29, மதியம் 12:30. மாலை 4:30 – திருக்குடும்பத் திருவிழாத் திருப்பலி



## வாரநாள் திருப்பலிகள்

**செவ்வாய்க்கிழமை:** தூய அந்தோனியார் நவநாள் மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு திருப்பலியும் நடைபெறும்

**புதன்கிழமை:** சதாசகாய அன்னை நவநாள் மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு திருப்பலியும் நடைபெறும்

## முதல் வெள்ளி - நற்கருணை வழிபாடு

மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு நற்கருணை வழிபாடும் தொடர்ந்து திருப்பலியும்

## திருமுழுக்கு அருட்சாதனம்

**பிரதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3:00 மணி (மார்கழி 22, 29, தை 5 திகதிகளில் நடைபெறமாட்டாது)**

பெற்றோர்கள் திருமுழுக்கு அருட்சாதன ஆயத்த வகுப்பில் பங்கெடுப்பது முக்கியமானது. ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற முதல் செவ்வாய்க்கிழமைகளில் மாலை 6:00 மணி தொடக்கம் மாலை 7:00 மணி வரை எமது பங்கில் ஆயத்த வகுப்புகள் நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு எமது அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

## ஒப்புரவு அருட்சாதனம்

அனைத்து திருப்பலிகளின் முன்பும் பின்பும் அல்லது முன்னேற்பாட்டுடன் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

## திருமண அருட்சாதனம்

தயவுசெய்து பங்குத்தந்தையை காலம் தாமதிக்காமல் தொடர்பு கொள்ளவும். ஒரு வருடத்திற்கு முன்னர் அறிவிப்பது விரும்பத்தக்கது. ரொறன்ரோ மறைமாவட்டத்தினால் ஒழுங்குசெய்யப்படுகின்ற திருமண ஆயத்த வகுப்புகளில் பங்குபற்றி சான்றிதழைப் பெற்றுக்கொள்வதும் அவசியமானது.

## முதல் நன்மையும் உறுதி பூசுதலும்

2020 ஆம் ஆண்டில் எமது பங்கில் முதல் நன்மையும் உறுதி பூசுதலும் பெற விரும்புகின்ற பிள்ளைகள் தமது பாடசாலைகளில் நடைபெறவிருக்கின்ற ஆயத்த வகுப்புக்களில் பங்கேற்பது முக்கியமானது. கத்தோலிக்க பாடசாலைகளில் கல்விபயிலாத பிள்ளைகள் பங்கு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

## தை மாத திருவிழாத் திருப்பலிகள்

**தை 19 ஞாயிறு மாலை 4:30 பொங்கல் திருவிழா**

**தை 26 ஞாயிறு மாலை 4:30 தூய செபஸ்தியார் பெருவிழா**

## Children’s Oli Vizha 2019

We would like to thank all parents, volunteers, leaders and coordinators for their support and time in staying back or coming early in preparation for the Oli Vizha of 2019. A very special thanks go to the following families for sponsoring lunch for our kids:

Anton Philip's family
Arulnesan's family
Mariyanayagam's family

Wishing all families a very Merry Christmas and a Blessed New Year!

## Children's Ministry

Greetings to the students in grade 5 or above. Are you looking into being more involved with the Church? Do you want to contribute or become better citizens of our Tamil parish community? Well, there's a chance for you to do so in the upcoming year. Further information will be provided in future bulletins, so please watch out for them.

## பாடகர் குழாம்

எமது ஆலய பாடகர் குழாமில் இணைந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் மற்றும் இசைக் கலைஞர்களை அன்போடு அழைக்கிறோம். தயவுசெய்து பங்குத்தந்தையுடன் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு, உங்களது விருப்பத்தைத் தெரிவிக்கவும்.

## 2020 திருவழிபாட்டு நாட்காட்டி

எமது பங்கின் 2020 வருடத்திற்கான திருவழிபாட்டு நாட்காட்டி நாளாந்த வாசகங்கள், பெருவிழா திருப்பலிகள், தூயவர்களின் திருவிழாக்கள், மற்றும் எமது பங்கு சார்ந்த அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ளது. ஒரு சிறிய அன்பளிப்பைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## எமது பங்குத்தந்தையின் உள்ளத்திலிருந்து



கிறிஸ்து இயேசுவில் அன்பான சகோதர, சகோதரிகளே, இளையோரே என் அன்பான சிறுவர்களே,

***"ஒரு குழந்தை நமக்காக பிறந்துள்ளார். ஒரு மகன் நமக்குத் தரப்பட்டுள்ளார்". ஆண்டுதோறும் எங்கள் மீட்பை எதிர்பார்த்திருக்க செய்வதனால் எங்களை மகிழ்விக்கிறீர். ஒரே திருமகனை மீட்பராக மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளுகின்ற நாங்கள், நடுவராக வரும் அவரை நம்பிக்கையுடன் சந்திக்கவும் தகுதி பெறுவோமாக.***

அன்புக்குரியவர்களே, கிறிஸ்து பிறப்பு பெருவிழாவிற்கு எம்மை ஆன்மீக வழியில் தயார் செய்திருக்கிறோம். அவரது மகிழ்வான பிறப்பு விழாவைக் கொண்டாடும் பங்கு மக்கள் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதிலும் நத்தார் செய்தியை வழங்குவதிலும் பெருமகிழ்வும் பூரிப்பும் அடைகிறேன். வார்த்தை மனுவானார். நம்மிடையே குடிகொண்டார். இறைவன் மனிதனாக இவ்வுலகில் வந்துதித்தார். மனிதனுக்குரிய பண்போடு பழகினார். மனித நேயத்தை வாழ்ந்து காட்டினார். மனிதத்திற்கு அர்த்தம் கொடுத்தார்.

அன்பார்ந்தவர்களே, உயர்ந்த சிந்தனையாலும், சிறந்த வாழ்வாலும், நன்னடத்தையாலும், பிறரன்புத் தொண்டுகளாலும் நாம் மனிதர்களாக மாறுகிறோம், வாழ்கின்றோம். இன்றைய நாட்களில் கிறிஸ்து பிறப்பு செய்தியும், கொண்டாட்டங்களும் எமக்கு தருகின்ற செய்தியானது, "வார்த்தை மனுவுருவானார். நம்மிடையே குடிகொண்டார்" என்னும் வார்த்தைகள் கிறிஸ்து மனிதனாக மக்கள் மத்தியில் வாழ்ந்து காட்டியதையே குறித்து நிற்கிறது.

அன்பான உறவுகளே, மகிழ்ச்சியான கிறிஸ்து பிறப்புக் காலத்தில் உங்கள் கனவுகள் எதிர்பார்ப்புக்கள் தேவைகள் யாவும் கிடைத்திடவும், மலரவிருக்கும் புதிய ஆண்டில் இறைவனின் ஆசீரும் மரியன்னையின் பரிந்துரையும், திருக்குடும்பத்தின் ஆசீரும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிறைவாக பொழியப்படவேண்டுமென்றும் செபத்துடனான நல்வாழ்த்துக்களையும், புதவருட அசீரையும் வேண்டி நிற்கிறேன்.

## *WISH YOU A VERY HAPPY CHRISTMAS AND A BRIGHT NEW YEAR 2020*

**சாள்ஸ் கொலின்ஸ்**
*பங்குத்தந்தை*
*தூய ஆரோக்கிய அன்னைத் தமிழ்ப் பங்கு*

---

## SEASON'S GREETINGS



***Wishing you all a blessed and Merry Christmas and a prosperous New Year!!!***

***Fr. Peter Gitendran***
*Resident Pastor*

---

## Office Hours during the Holiday Season:

Please note that our office will be closed the following dates: **December 25, 26, 27, 28 and 29, 2019 & January 01, 2020**.

For Emergency Contacts: **அவசர தேவைகளுக்கு:**
**Fr.Charles Collins**: 647-671-8272

---

## எமது பங்கின் இளையோருக்கான அழைத்தல்

தூய ஆரோக்கிய அன்னை பங்கின் எதிர்கால வளர்ச்சி இன்றைய இளையோர், மாணவர், சிறுவர்களின் கைகளில் தங்கி இருக்கிறது. எமது பங்கின் வளர்ச்சிக்கு மொழி எவ்வகையிலும் தடையாக இருக்கக்கூடாது என்பது என் ஆவல். ஆகவே தொடர்ந்து எமது எதிர்கால சமூகமும் படிப்படியாக எமது பங்கின் வளர்ச்சியில் அக்கறையும் பங்களிப்பும் செய்யுமாறு அவர்களை வழி நடத்த வேண்டியது பெற்றோர், பெரியோர்களாகிய எமது பொறுப்பாகும். நாம் எமது பங்கின் பணிப்பீடத்தை பலப்படுத்துவோம். அவற்றில் உங்களை இணைத்துக்கொண்டு எமது தூய ஆரோக்கிய அன்னைப் பங்கை வளர்ப்போம்,

---

## எமது பங்கின் பணிப் பீடங்கள்

- பங்குச்சபை
- பீடப்பணியாளர்கள்
- வாசகர்கள்
- நற்கருணைப் பணியாளர்கள்
- வரவேற்பாளர்கள்
- பாடகர் குழுவினர்
- மரியாயின் சேனை
- நிதிப் பொறுப்பாளர்கள்
- தன்னார்வத் தொண்டர்கள்

## திருவழிபாட்டுப் பாடல்கள்

எமது பங்கின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழாவின் நினைவாக **பரமனுக்கு பாமாலை III** எனும் ஆயிரத்திற்கு மேற்பட்ட திருவழிபாட்டுப் பாடல்கள், புதிய திருப்பலிச் செபங்கள் அடங்கிய நூல் வெளியிடப்பட்டுள்ளது. அதனை முழுமையாக பயன்படுத்திப் பலன்பெற நீல நிறப் பாடல் புத்தகங்கள் ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. **இவற்றை தயவுசெய்து வீடுகளுக்கு எடுத்து செல்ல வேண்டாம்.** உங்கள் தேவைகளுக்கு ஆலயத்தின் வெளியே சிவப்பு நிற புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. உங்களுக்கான பிரதி ஒன்றை $25 செலுத்திப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## குடும்பங்களைப் பதிவுசெய்தல்

ரொறன்ரோ மறைமாவட்ட வழக்கப்படி திருமுழுக்கு, திருமணம் போன்ற திருவருட்சாதனங்களை பெற்றுக்கொள்ள கத்தோலிக்க பங்கு ஒன்றில் பதிவு செய்வது அவசியமானது. எமது தமிழ் கத்தோலிக்க பங்கில் உங்களது குடும்பங்களையும் பதிவு செய்துகொள்ள மறக்காதீர்கள்.

### எமது பங்கிற்கு நன்கொடையளிக்க விரும்புகிறீர்களா?

**பொதுவான முறை**
ஒரு வருடத்திற்கான அன்பளிப்பு கடித உறைகளை பெற்று ஒவ்வொரு கிழமையும் திருப்பலியின் போது செலுத்துதல்.

**முன் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு முறை**
உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகையை நேரடியாகப் பெற்றுக்கொள்ளுதல்.

**அவ்வப்போது செலுத்தும் முறை**
நீங்கள் திருப்பலிக்கு வருகின்ற போது அல்லது எமது பங்கு அலவலகத்திற்கு வருகின்ற போது உங்களுக்கு விரும்பிய தொகையை செலுத்துதல்.

$25ம் அதற்கு மேற்பட்ட வருடாந்த அன்பளிப்புகளுக்கு வரி விலக்கிற்கான பற்றுச்சீட்டுகள் வழங்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு எமது அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.**

## 2020 அன்பளிப்பு கடித உறைகள்

2020 ஆண்டிற்கான உங்களது அன்பளிப்புக் கடித உறைகளை மறக்காமல் பெற்றுக்கொள்ளுங்கள் உங்களது தாராளமான உதவியில் தான் எமது பங்கு வளர்ச்சிபெற்று வருகிறது. **"சிறு துளி பெரு வெள்ளம் - எமது ஆலயமே எமது குடும்பம்"**

### விசேட திருப்பலிகள்

நினைவுத்திருப்பலி, சிறப்புத்திருப்பலிகளுக்கு எமது ஆலய அலுவலகத்தைத் நேரகாலத்துடன் தொடர்புகொள்ளவும்.

## தேவ அழைத்தல்

எமது குடும்பங்களில் தேவ அழைத்தல் உருவாக வேண்டுவோம். பீடத்தை அலங்கரிக்கும் இயேசுவின் பிரதிநிதிகளாக எமது பிள்ளைகளும் உருவாக உற்சாகம் கொடுப்போம். **"அழைத்தலின் விளை நிலம் குடும்பம்"**. இறையருளால் நனவாகும்.

## நன்றியோடு நினைக்கின்றோம்

எமது பங்கின் வளர்ச்சிக்காக பல வழிகளில் உதவிய, தொடந்தும் உழைக்கின்ற பொதுநிலையினர், பீடப்பணியாளர்கள், Children's Liturgy Leaders, இளைஞர் குழு, பாடகர் குழாம், வரவேற்பாளர்கள், வாசகர்கள், மரியாயின் சேனை, நற்கருணைப் பணியாளர்கள், பங்குச்சபை உறுப்பினர்கள் வாகனத் தரிப்பு ஒழுங்கு செய்பவர்கள், தன்னார்வத் தொண்டர்கள், இலைமறை காயாக அர்ப்பணத்துடனும் நல்மனதுடனும் பணிகளை மேற்கொள்ளும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மகிழ்ச்சியுடன் கூடிய எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், மலரும் ஆண்டிலும் உங்கள் ஒவ்வொருவரின் பூரண ஒத்துழைப்பை அன்போடு எதிர்பார்த்து நிற்கிறோம். உங்களையும் உங்கள் குடும்பத்தையும் தூய ஆரோக்கிய அன்னை ஆசீர்வதித்து வழிநடத்த தினமும் நாம் வேண்டுகின்றோம்.

